# இயேசுவின் போதனைகளில் வெளிப்படும் ஆசிரியத்துவம்: உவமைகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு

**M. W. Surendraraj**
Department of Christian and Islamic Civilizations, University of Jaffna
winifreeda@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஆசிரியத்துவமானது மாணவ சமுதாயத்தின் எதிர்காலத்திற்கு வழிகாட்டும் நோக்கில் அதற்கேயுரிய தகுதிகளைக் கொண்ட உயர் அந்தஸ்து மிக்க சேவையாகும். இயேசு தனது போதனைகளை முன்வைக்கப் பயன்படுத்திய முறைமைகள் அவரின் ஆசிரியத்துவத்தின் சிறப்பை எடுத்துரைக்கின்றது. இயேசுவின் போதனைகளில் உவமைகள் சிறப்பிடம் பெறுகின்றன. உவமைகள் அறிந்த ஒன்றிலிருந்து அறியாத ஒன்றை அறிய வைப்பதாக அமைகின்றன. அந்த வகையில் மனதைக் கவர்ந்து, கவனத்தை ஈர்க்கின்ற உவமைகள் வலிமைமிக்க போதனா கருவியாகத் திகழ்கின்றன. இயேசு தான் வாழ்ந்தக் காலத்தில் சாதாரண மக்களின் பாவனையிலிருந்த, அவர்களின் வாழ்வுடன் மிகநெருங்கிய தொடர்புடைய விடயங்களை உவமைகளாகக் கையாண்டமையே அவரின் போதனைகளின் தனித்தன்மையை சிறப்புற எடுத்துரைக்கின்றன. இயேசுவின் உவமைகள் வெறும் கதைகளாக அல்லாது மக்களுக்கு விழிப்புணர்வைக் கொடுப்பதை நோக்காகக் கொண்டிருந்தன. உவமைகளை இயேசு எளிய நடையில், பொருத்தமான முறையில் போதித்தார். உவமைகள் இயேசுவின் போதனைகளை அதிகம் சுவையூட்டி, மக்கள் விரும்பிச் செவிமடுப்பதற்கான ஆவலைத் தூண்டின. அவர் தனது உவமைக;டாகப் பாமர மக்களுக்குத் தனது படிப்பினைகளை முன்வைக்கும் முறையில் அவரது ஆசிரியத்துவத்தின் சிறப்பு வெளிப்படுகின்றது.

அந்தவகையில் இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங்களைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இயேசுவின் போதனைகளில் உவமைகளை அவர் என்ன நோக்கத்திற்காக் கையாண்டார் என்னும் விடயத்தையும், உவமைக;டாக வெளிப்படும் இயேசுவின் ஆசிரியத்துவத்தின் சிறப்பையும் எடுத்துரைக்கும் வகையில் ஆய்வு அமைவதுடன், அவருடைய போதனைகளில் கையாளப்பட்ட உவமைகளை வகைப்படுத்தி, அவற்றை நற்செய்தியாளர்கள் தாங்கள் வாழ்ந்த சூழ்நிலைக்கு ஏற்ற வகையில், எந்த மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கின்றார்கள் என்னும் விடயமும் ஒப்பீட்டு நிலையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து இயேசுவின் போதனைகளில் அவர் பயன்படுத்திய ஆசிரியத்துவ முறைமைகள் சமகாலத்தில் எவ்வாறு பயனுடையதாய் அமையும் என்னும் விடயமும் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்விற்கான தரவுகள் மூல நூலான திருவிவிலியத்தில் இருந்தும், துணை நூல்களிலிருந்தும் பெறப்பட்டு, கருத்துக்கள் விபரண, ஒப்பீட்டாய்வு, பகுப்பாய்வு என்னும் முறையியல்களை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன.

***பிரதான சொற்பதங்கள்:*** *- இயேசுவின் போதனை, நற்செய்தி, ஆசிரியத்துவம், உவமைகள்*

## 1. ஆய்வு அறிமுகம்

ஆசிரியத்துவமானது மாணவ சமுதாயத்தின் எதிர்காலத்திற்கு வழிகாட்டும் நோக்கில் அதற்கேயுரிய தகுதிகளையுடைய உயர் அந்தஸ்து மிக்க சேவையாகும். உலகளாவிய ரீதியில் ஆசிரியத்துவ செயற்பாடுகள் மிகுந்த மதிப்புக்குரியவையாகத் திகழ்வதுடன், ஆசிரியத்துவம் ஒருவரை அறிஞராக, ஆய்வாளராக, ஆசிரியராக மாற்றுகின்றது. இந்த வகையில் இயேசு தனது போதனைகளை முன்வைக்கப் பயன்படுத்திய முறைமைகள் இயேசுவின் ஆசிரியத்துவத்தின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. இயேசு தனது போதனைகளில் உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். உவமைகள் ஒரு வாக்கியத்தில் வரும் ஒரு விடயத்தை மறைமுகமாக விளக்குவதற்கு உதவுவதோடு, அறிந்த ஒன்றிலிருந்து அறியாத

ஒன்றை அறிய வைப்பதாகவும் அமைகின்றன. அந்த வகையில் மனதைக் கவர்ந்து, கவனத்தை ஈர்க்கின்ற உவமை வலிமைமிக்க போதனா கருவியாகத் திகழ்கின்றது.

இவ் உவமைகளே இயேசுவின் போதனைகளின் தனித்தன்மையைச் சிறப்புற எடுத்துரைக்கின்றன. இயேசுவின் உவமைகள் வெறும் கதைகள் அல்ல. மக்களுக்கு விழிப்புணர்வைக் கொடுப்பதே இதன் நோக்கமாக அமைந்ததுடன், உவமைகளின் அர்த்தத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு தடையாக இருக்கும் தேவையற்ற விபரிப்புக்களை இயேசு தவிர்த்து, அன்றாட வாழ்வுடன் தொடர்புடைய உவமைகளை எளிய நடையில், பொருத்தமான முறையில் போதித்தார். அவர் தனது உவமைக;டாகப் பாமர மக்களுக்குத் தனது படிப்பினைகளை முன்வைக்கும் முறையில் அவரது ஆசிரியத்துவத்தின் சிறப்பு வெளிப்படுகின்றது.

அந்தவகையில் இவ் ஆய்வானது உவமைகளை இயேசு என்ன நோக்கத்திற்காகப் பயன்படுத்தியுள்ளார் என்பதையும், அவர் பயன்படுத்திய உவமைகள் எவ்வாறு அவரின் ஆசிரியத்துவத்தைச் சிறப்பிக்கின்றன என்பதையும் எடுத்துரைக்கின்றது. மேலும் அவருடைய போதனையில் கையாளப்பட்ட உவமைகளை வகைப்படுத்தி, அவை முன்வைக்கும் மையக்கருத்தை தாங்கள் வாழ்ந்த சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் எவ்விதம் முன்வைக்கின்றார்கள் என்னும் விடயம் ஒப்பீட்டு நிலையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து இயேசுவின் போதனைகளில் அவர் பயன்படுத்திய ஆசிரியத்துவ முறைமைகள் சமகாலத்தில் எவ்வாறு பயனுடையதாய் அமைகின்றன என்னும் விடயமும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

நான்கு நற்செய்திகளிலும் உவமைகள் காணப்படுகின்றன, எனினும் அவற்றை நற்செய்தியாளர்கள் குறிப்பிடும் முறை, முன்வைக்கும் மையக்கருத்து என்பவற்றில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**ஆய்வின் கருதுகோள்கள்**

- இயேசுவின் போதனைகள் சாதாரண மக்களை மையமாகக் கொண்டு விளங்கின.
- இயேசு தனது படிப்பினைகளை முன்வைக்கப் பயன்படுத்திய உவமைகள், விளக்கங்கள் என்பன அவரைச் சிறந்த ஒரு ஆசிரியராகத் திகழச் செய்தன.
- இயேசு தனது போதனையில் அக்காலத்தில் வாழ்ந்த சாதாரண மக்களின் பாவனையிலிருந்த, அவர்களின் வாழ்வுடன் மிக நெருங்கிய தொடர்புடைய விடயங்களையே உவமைகளாகக் கையாண்டுள்ளார்.

**ஆய்வின் நோக்கம்**

- இயேசுவின் போதனைகளில் உவமைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன என்பதை எடுத்துரைப்பது.
- இயேசு உவமைகளை என்ன நோக்கத்திற்காகக் கையாண்டார் என்னும் விடயத்தைத் தெளிவுபடுத்துவது.
- உவமைக;டாக இயேசுவின் போதனையில் வெளிப்படும் ஆசிரியத்துவத்தின் சிறப்பையும் ஆய்வு செய்து முன்வைப்பது.

**ஆய்வு முறையியல்**

இயேசுவின் போதனையில் கையாளப்பட்டுள்ள உவமைகளை வகைப்படுத்தி, அவற்றை நற்செய்தியாளர்கள் தாங்கள் வாழ்ந்த சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் எந்த மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கின்றார்கள் என்னும் விடயத்தை ஒப்பீட்டு நிலையில் ஆய்வுக்குட்படுத்தி, தொடர்ந்து இயேசுவின் போதனைகளில் அவர் பயன்படுத்திய ஆசிரியத்துவ முறைமைகள் சமகாலத்தில் எவ்வாறு பயனுடையதாய் அமைகின்றன என்னும் விடயமும் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வின் பயன்பாடு**

- இயேசுவின் போதனையில் உவமைகள் பெறும் முக்கியத்துவத்தை அறியக்கூடியதாய் அமைகின்றது.
- இயேசுவின் போதனை கேட்போரின் சூழலுக்கு ஏற்றவாறு அமைந்திருந்ததை அறியக்கூடியதாயுள்ளது.
- இயேசு தனது போதனையில் பயன்படுத்திய உவமைகளை நற்செய்தியாளர்கள் எடுத்துரைக்கையில் அவற்றின் மையக்கருத்து, முன்வைக்கும் முறை என்பவற்றில் சில வித்தியாசங்களைக் கையாண்டுள்ளதை அறியக் கூடியதாய் உள்ளது
- இயேசுவின் போதனாமுறை இன்றைய ஆசிரியத்துவ செயற்பாடுகளுக்குப் பயனுடையதாக அமையும் என்பதை விளங்கிக் கொள்ளக் கூடியதாயுள்ளது.

**ஆய்வின் தரவுகள்**

**முதலாம் நிலைத் தரவுகள் -** மூல நூலான திருவிவிலியத்திலுள்ள நான்கு நற்செய்திகளிலிருந்து பெறப்பட்ட தரவுகள்.

**இரண்டாம் நிலைத் தரவுகள் -** விவிலிய விளக்கவுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வேடுகள், கட்டுரைகள் முதலியவற்றில் இருந்து பெறப்பட்ட தரவுகள்.

**ஆய்வின் முடிவுகள்**

இயேசுவின் ஆசிரியத்துவத்தின் சிறப்பு அவருடைய போதனை மக்கள் அனைவரையும் சென்றடைந்தது என்பதிலிருந்தே தெளிவாகின்றது. இதற்கென இவர் உவமைகளை பயன்படுத்தியுள்ளார். அவர் பயன்படுத்திய உவமைகள் வெறும் புனைக்கதைகள், கட்டுக்கதைகளை மையமாகக் கொண்டமையாது, மக்களின் வாழ்வில் காணப்பட்ட உண்மைச் சம்பவங்களையும் இயற்கையையும் மையப்படுத்தி அமைந்தமை அவரது ஆசிரியத்துவத்தின் வலுவான அம்சமாகக் காணப்படுகின்றது. சாதாரணமான மீன்பித் தொழில் செய்த திருத்தூதர்கள் இயேசுவின் போதனையை ஞாபகத்தில் இறுத்திக் கொள்ள போதிய வசதி இல்லாதவிடத்தும் அதனை மனதில் பதித்து வைக்கக் கூடியவகையில் இயேசுவின் ஆசிரியத்துவம் வழிகாட்டியது.

உவமைகளின் அர்த்தத்தை தெளிவாகப் புரிந்துகொள்வதற்குத் தடையாக இருக்கும் தேவையற்ற விபரிப்புக்களைத் தவிர்த்தமை அவரது ஆசிரியத்துவ முறையின் சிறப்பம்சமாகும். மேலும் இயேசு உவமைகளில் அதிகமான தகவல்களை இணைக்கவில்லை. விவரங்களை வெகு கவனமாக பயன்படுத்தியதால் அவை சுருக்கமாக இருந்தன. மக்களின் வாழ்க்கையோடு நெருங்கியத் தொடர்புடைய உவமைகளை தனது ஆசிரியத்துவத்தில் பயன்படுத்தியதால் அவை இயேசுவின் போதனைகளை அதிகம் சுவையூட்டி, அதனை மக்கள் விரும்பிச் செவிமடுப்பதற்கான ஆவலைத் தூண்டின.